என்றும் பதில் அளித்திருக்கிறார்கள். அந்தக் கோட்டையைத் தற்காலத்திற்கேற்றவாறு புதுப்பித்துவிட்டால் பழமையின் தன்மை மறைந்துவிடும். பழுது ஏற்படுவதைத் தற்போது அவர்களே பராமரித்து வருகிறார்கள். அதைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

திருமலை நாயக்கர் மகாலில் கலைக்கூடம்

* 391. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் கலைக்கூடம் ஒன்று துவக்க அரசு பரிசீலனை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : திருமலை நாயக்கர் மகால் நம்முடைய பண்டையக் கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. வெளிநாட்டவர் கூட மெச்சத் தகுந்த விதத்தில் அமைந்திருக்கிறது. வெளிநாட்டவரைக் கவரக்கூடிய விதத்தில் அங்கு கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்துவதோடு திருமலை நாயக்கர் மகாலில் இருந்து சுரங்கப் பாதை மதுரை நகரத்தின் பல பகுதிகளுக்குச் செல்லுவதாகச் சொல்லப்படுவது பற்றியும் ஆராய்ச்சி செய்து சரித்திரச் சான்றுகளை வெளிப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமலை நாயக்கர் மகாலைப் பொறுத்தவரை அரசாங்கத்திடம் அப்பேர்ப்பட்ட செயற் குறிப்பு இல்லை. திருமலை நாயக்கர் மகால் தென்னக மாநிலங்களில் இருக்கும் அரண்மனைகளில் கட்டடக் கலைச் சிறப்போடு அமைந்த கூடமாக இருந்து வருகிறது. அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றி சுற்றுலாக் குழுவினர் ஆலோசனை செய்து வருகிறார்கள். கலைக் கூடம் ஏற்படுத்தலாம், சிறுவர் பூங்கா வைக்கலாம், நூல் நிலையம் அமைக்கலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே சுற்றுலாக் குழுத் தலைவராகவும் இருப்பதால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குத் தெரிவித்து, தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குநர் இதுபற்றிப் பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து உரையாடி இருக்கிறார்கள். திருமலை நாயக்கர் மகாலின் பழமையும், அழகும் கெடாதவாறு எப்படி அமைக்கலாம் என்று அவர்கள் ஆராய்ந்து முடிவு செய்த பிறகு அரசு மேற்கொண்டு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. பெ. மலைச்சாமி : நாயக்க மன்னர்கள் பாண்டி மண்டலத்தை ஆண்ட நேரத்தில் பல்வேறு சிலைகளையும், சிற்பங்களையும் செய்திருக்கிறார்கள். அந்தச் சிலைகள் அந்த மாவட்டம் முழுவதும் சீர்கெட்ட நிலையில் இருக்கின்றன. அவற்றை அரசு சேர்த்து இந்தத் திருமலை நாயக்கர் மகாலில் வைக்க முன் வருமா?

1971 ஜூலை 23]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோவில் சிற்பங்கள், சிலைகள் கொண்ட கலைக் கூடம் மீனாட்சி அம்மன் கோயில் மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்தில் இருக்கும் பல்வேறு சிலைகள் எல்லாம் கொண்டு வரப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாநகரத்தில் எப்படி கலைக்கூடம் நிறுவப்பட்டிருக்கிறதோ அதைப் போன்று மீனாட்சி அம்மன் கோவில் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருமலை நாயக்கர் மகாலில் கலைக் கூடம் அமைக்கவும், கலைப் பூங்கா அமைக்கவும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. திருப்பதி : திருமலை நாயக்கர் மகாலில் ஒலி—ஒளி ஏற்பாட்டை அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமலை நாயக்கர் மகாலைவிட மீனாட்சி அம்மன் கோயிலில் பரந்த மண்டபங்கள் இருக்கின்றன. டெல்லியில் செங்கோட்டைக்குப் போய்ப் பார்த்தவர்களுக்கு இதற்கு எப்படிப்பட்ட இடவசதி தேவைப்படும் என்று தெரியும். பாண்டியர் வரலாறு, நாயக்கர் வரலாறு ஆகியவற்றை எல்லாம் மீனாட்சி அம்மன் கோயில் மண்டபங்களை அடிப்படையாக வைத்துக் காட்டலாம். இதைப்பற்றி ஆராய்ந்த குழுவினர் இரண்டு இடங்களையும் பார்த்துவிட்டு மீனாட்சி அம்மன் கோயில் மண்டபங்கள்தான் இதற்கு ஏற்றவையாக இருக்குமென்று தெரிவித்திருக்கிறார்கள். சுற்றுலாக் குழுவினர் இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : திருமலை நாயக்கர் மகாலில் தற்போது நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அது பழுதடையக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறது. ஆகவே, கலைக்கூடத்தை ஆரம்பிப்பதில் துரித நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமலை நாயக்கர் மகால் தமிழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்தான் இருக்கிறது. விரைவில் மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி கூறப்பட்டிருக்கிறார்கள்.

பாண்டித்துரைத் தேவரின் இல்லம்

* 392 வினா.—திரு. க. சுப்பு : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்திலுள்ள, தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் அவர்கள் வாழ்ந்து வந்த இல்லத்தை, அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப் பயன்படுத்தும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. க. சுப்பு : வ.உ.சி., பாரதியார் போன்றவர்களுடைய இல்லங்களை அவர்களுடைய நினைவுச் சின்னமாக அமைத்தது போல் தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் இல்லத்தையும் அவருடைய நினைவுச் சின்னமாக ஆக்க அரசு முன்வருமா?